


ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**துறையூர் ஓங்காரக்குடிலில் அரங்கமகா ஞானியர்க்கு உண்டான**
**50வது தவசித்தி தீட்சை விழா**
**இதற்குண்டான பாதுகாப்பு அறிவுரை ஆசி விளக்கம்**

17.09.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆதிசிவன்தனை தொழுதேற்றி அரங்கன் யான்
வரமாக இந்த கலியுகத்தில் வடிவேலன் அம்சமாக
அவதாரமெடுத்து அறம் காத்து

2. இந்த கலியுகத்தில் ஆறுமுகப் பெருமானுக்கே
ஏழாம் படை வீடு படைத்து
படைத்து சண்முகனார் ஆசியாலே
தவசித்தி கண்டு சகலருக்கும்

3. அந்த சித்தி வழி தீட்சையாக
அருளி அரங்கன் யான்
அற்புதத்தை இந்த உலகில்
நடத்தி வரும் நன்னாளே

4. தவசித்தி தீட்சை விழா நாளாகும்
இந்தவித நன்னாளாம் வரக்கூடிய
ஐம்பதாவது அரங்கன் என்
தவசித்தி தீட்சை விழா நாளில்

5. வகைபட உலகமகா சக்திகளெல்லாம்
ஈசன் பிரம்மன் விஷ்ணு
நவகோடி சித்தர்கள் நவகிரக நாயகர்கள்
பஞ்சமகா சக்திகள் நாயன்மார்கள்

6. ஆழ்வார்கள் பெருமக்களென
அனைவருமே ஓங்காரக்குடிலில்
வந்து கலந்து இனிதே
பேரற்புதம் நிகழ்த்த இருக்க




7. இந்தவித நன்னாளாம் ஓங்காரக்குடிலின்
அரங்கன் என் தவசித்தி தீட்சைவிழாவில்
பெருமளவில் உலக மக்களும்
அன்பர் பெருமக்களும் தொண்டர் பெருமக்களும்

8. கலந்து கொண்டு இனிதே
இந்த விழா சிறப்போடு நடக்க இருக்க
ஆறுமுகனாரே தலைமையேற்று
அரங்கன் என் தவசித்தி தீட்சை விழாவை

9. சிறப்பிக்க இருக்க உலக மக்களெல்லாம்
வந்து கலந்து பாதுகாப்பாய்
இந்தவித நன்னாளில் அரங்கன் என்
ஜோதி பூஜை கலந்து

10. அரங்கன் யான் ஜோதி வடிவில்
தருகின்ற ஆசிதனை ஏற்று
அரங்கன் என் கரம்பட
சூட்சுமமாய் என் சீடன்

11. ராம்குமார் கரம்பட யான் தருகின்ற
தீட்சையை இந்தவித நன்னாளில்
ஏற்போர்க்கெல்லாம் தீட்சை சித்தியும்
ஞான சித்தியும் காரிய சித்தியும்

12. யோகசித்தியும் உண்டாகக் கூடும்
அவரவர் வேண்டி வருகின்ற வரங்கள்
இன்று நாள் தீட்சை ஏற்க
அவர்கட்கெல்லாம் எல்லா சித்தியும் காணக்கூடும்

13. இவ்வித அற்புதங்களை இந்த விழா நாளில்
அரங்கன் யான் குடில் முழுக்க
சக்தியாக நிரப்பி அருள் பாலிக்கின்றேன்
குடிலின் இந்தவித நன்னாளில்

14. அன்னதானத்தில் அருளமுதில்
அருமருந்தாக சக்தியூட்டி இன்னும்
வருபவர்க்கு சர்வபிணி நீக்கி
பாதுகாக்கின்றேன் இந்த நன்னாளில்

15. ஸ்பரிசமாகவும் வாசனையாகவும்
உணவாகவும் தீட்சையாகவும்
அரங்கன் யான் அற்புதம் நிகழ்த்த
என் சக்திக்குள் நவகோடி சித்தர்களும் கலந்து

16. ஆறுமுகப்பெருமானும் இணைந்து
வரும் அன்பர்கட்கு அற்புதமும்
ஆசியும் ஆக்கமும் தருகின்றனர்
அன்னதனால் இந்த நாளில்

17. கலந்து கொள்பவர்க்கெல்லாம்
ஞானசித்தி பிறவாப் பேறென்பது
உறுதியாகும் மேலும் இவ்விழாவில்
அரங்கன் யான் சர்வ பாதுகாப்பு தந்து

18. காத்தருள என் தொண்டர்
பெருமக்கட்கும் சோர்வு சலிப்பு
அசதி வாராத வண்ணம்
களைப்பில்லா வண்ணம் பாதுகாத்து

19. ஆற்றல்பட இயங்க பெருமாற்றம் தருவேன்
இதற்கு தேவையான பொருளாதார பலமும்
கூட்டி அரங்கன் யான் காப்பேன்
நிர்வாகத்திலும் சிறப்பு கூட்டி

20. இந்தவித நன்னாளில் அவர்களுக்கும்
பாதுகாப்பும் சக்தியும் மேன்மையும்
தந்து அரங்கன் யான்
சர்வபலமாய் இருந்து வழிநடத்துவேன்

21. விழா சிறப்போடு நடந்தேறவும்
விழாவில் வரும் அன்பர்கட்கும்




வந்து செல்பவர்கட்கும்
தொண்டர்கட்கும் நிர்வாகிகட்கும்

22. சர்வ பாதுகாப்பு தந்து அருள்புரிவேன்
ஆக்கமுடன் இவ்விழாவில் எல்லா வகையிலும்
தொண்டாற்றுகின்ற அன்பர் அவரவர்க்கும்
அவர்கள் குடிக்கும் அரங்கன் என்

23. பரிபூரண பாதுகாப்பு உண்டு உண்டு
அன்னதனால் தவசித்தி தீட்சை விழா
உலகமகா சக்திகளெல்லாம் ஒன்று கூடும்
ஒரு பெருவிழாவாகும் அன்னதனால்

24. ஓங்காரக்குடில் நோக்கி உலகோர்
இந்த அற்புதத்தை வந்து கலந்து ஏற்று
ஆக்கம் பெறவும் அவர்கட்கு இன்னும்
தன் பிறவி நோக்கம் உறுதியாகி

25. பிறவாப் பெரும்பேறு கொள்ளவும்
அரங்கன் யான் அற்புதம் நிகழ்த்துவேன்
அரங்க மகான் யான் அருளிய
பாதுகாப்போடு கூடிய அருளாசி ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–